திரு. கே. ஏ. செங்கோட்டையன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது கோபியில் டிவிஷனல் அலுவலகம் ஒன்று 1—9—1989 ஆம் தேதியன்று உருவாக்கபபட்டு, ஒன்பது நாட்களுக்குள்ளாக இந்த டிவிஷனல் அலுவலகம் மாற்றப்பட்டு இருக்கிறது. அதைப்போல நிலைமை இருக்குமானால், இதுபோன்ற பணிகளை விரைவாக செய்ய முடியாமல், கால தாமதம் ஏற்படும் என்பதால், மிக விரைவாக அங்கே டிவிஷனல் அலுவலகத்தை உருவாக்க, அதனை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் நடைபெறுகிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்து அங்கே அலுவலகங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, நிர்வாக வசதியைப் பொறுத்து, புதிய அமைப்பை உருவாக்குவதைப் பொறுத்து, குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் அரசு மருத்துவமனை.

*5210—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி அதிக படுக்கைகள் கொண்டதாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. இரா. சாமிநாதன் : தலைவர் அவர்களே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் நலம், குடும்ப நலக்கட்டுப்பாடு, தொழுநோய், காலரா, காசநோய் ஆகிய அத்தனை பிரிவுகளுக்கும் சேர்த்து 111 படுக்கை வசதிதான் தற்போது இருக்கிறது. மேலும், திருமங்கலம், உசிலம்பட்டி, சேடப்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் சேர்த்து குடும்பநல கட்டுப்பாட்டு முகாமும் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தான் நடத்தப்படுகிறது.

அதோடு நாள் தோறும் சுமார் 1,800 முதல் 2 ஆயிரம் வரை வெளிநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. எனவே, குறைந்தபட்சம் 20 வெளி நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வசதி என்ற அடிப்படையில் 200 கூடுதல் படுக்கை வசதியை செய்து கொடுத்திட இந்த ஆண்டு திருமங்கலம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த, கழக அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த ஆண்டு விரிவுபடுத்தும் நோக்கம், திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. வருகிற ஆண்டுகளில் அரசினுடைய நிதிநிலையைக் கருதி அதற்கான திட்டங்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளுக்காக இயங்கிவந்த பிரிவை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தால், 10 பேர்களைக் கொண்ட சில்ட்ரன் வார்ட்ஸ்க்கு என்று இருக்கிற சிறிய கட்டிடத்தில் கடந்த 7, 8 ஆண்டுகளாக வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதால், அங்கே சிகிச்சைக்காக வருகிற ஆண்கள், பெண்கள், மற்றும் மருத்துவர் ஆகியோர்களுக்கு சங்கடமான நிலை ஏற்படுகிறது. காரணம் அங்கே பிரைவசி இல்லை. எனவே, இப்படிப்பட்ட சங்கடமான நிலையைத் தவிர்க்க அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு தனி இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கோ அல்லது அரசு மருத்துவமனை உள்ள வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் தனியாக வெளி நோயாளிகளுக்கு என்று ஒரு பிரிவிற்காக ஒரு கட்டிடம் கட்டுவதற்கோ அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை ஒரு தாலுக்கா மருத்துவமனை என்ற அடிப்படையில் அனைத்துச் சிறப்புப் பகுதிகளையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. நான் முன்பே சொன்னதைப் போல அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப இதுபோன்ற தேவைகளை படிப்படியாக இந்த அரசு நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

1990 மே 9]

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தாலுக்காக்களில் தாலுக்காவிற்கு குறைந்தபட்சம் ஒரு அரசு மருத்துவமனை கூட இல்லாமல் இருக்கிறது. இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தின் வழியாக போதிய சிகிச்சையைப் பெற முடியாமல் மக்கள் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் ஒரு தாலுக்காவிற்கு ஒரு அரசு மருத்துவமனை இருந்தாக வேண்டும் என்கிற இலக்கை இந்த அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசில் 30 ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அந்த இலக்கை எட்டியிருக்கிறோம். மேலும் அது 20 ஆயிரம் பேர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்ற இலக்கை நோக்கி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். தாலுக்கா மருத்துவ மனைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. உங்களுடைய பகுதியிலே இதுபோன்ற தேவைகளும் நோயாளிகளுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்று சொன்னால், அதற்கான திட்டங்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

* 5516—**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறைப் பிரிவிற்கு புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்டு நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அப்பிரிவு இன்னும் இயங்காமல் இருக்க காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயத்துறை 10—7—1989 முதல் இயங்கிவருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இதயத் துறையில் மருத்துவர் கார்டியாலஜிஸ்ட் யார் யாரை நியமித்தாலும்